**தஞ்சாவூர் முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்**

**ந.க.எண்.8065/ஆ3/2023 நாள்.25.09.2023.**

---

பொருள்: தமிழ்நாடு இடைநிலைக்கல்விப்பணி – 01.08.2023 அன்றைய நிலவரப்படிஅரசு/ நகராட்சி / மாநகராட்சி உயர் / மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவியர்களின் எண்ணிக்கை அடிப்படையில் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் நிர்ணயம் செய்யப்பட்டமை – ஆசிரியருடன் உபரி பணியிடத்தினை உறுதிபடுத்துதல் – தொடர்பாக.

பார்வை:
1. சென்னை-06, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் ந.க.எண்.48800/சி3/இ1/2023 நாள்.04.08.2023 மற்றும் 11.08.2023.
2. தஞ்சாவூர் முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.8065/ஆ3/2023 நாள்.21.08.2023.

------

பார்வை (1) இல் காணும் தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகளுக்கு இணங்க 2023-2024 ஆம் கல்வி ஆண்டிற்கான அரசு/ நகராட்சி / மாநகராட்சி உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் 01.08.2023 அன்றைய நிலவரப்படி (EMIS பதிவின்படி) மாணவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் (பட்டதாரி ஆசிரியர்கள்) பணியாளர் நிர்ணயம் ( BT Staff Fixation) சார்பான பணிகள் கல்வி மேலாண்மை தகவல் முறைமை EMIS மூலமாக மேற்கொள்ளப்பட உள்ளது.

பார்வை (2) இல் காணும் இவ்வலுவலக செயல்முறைகளின்படி, பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் (BT Staff Fixation) சார்பான விவரங்களை அனுப்பி வைத்திட அரசு / நகராட்சி உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது.

2023-2024 ஆம் கல்வி ஆண்டிற்கான 01.08.2023 அன்றைய நிலவரப்படி பட்டதாரி ஆசிரியர் பணியாளர் நிர்ணயம் (BT Staff Fixation) செய்யப்பட்டதில் பள்ளிகளில் ஆசிரியருடன் உபரி பணியிடம் கண்டறிப்பட்டுள்ளது.

எனவே, படிவம் 1 இல் காணும் ஆசிரியருடன் உபரி பணியிடம் கண்டறிப்பட்டுள்ள சம்மந்தப்பட்ட பள்ளிகள் படிவம் 2 இல் கலம் 1 முதல் கலம் 17 வரை விடுபடாமல் பூர்த்தி செய்து தலைமையாசிரியர் கையொப்பத்துடன் தனிநபர் மூலம் நாளை (26.09.2023) மதியம் 2.00 மணிக்குள்

தஞ்சாவூர் முதன்மைக் கல்வி அலுவலக ஆ3 பிரிவில் ஒப்படைத்திட சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்

மேலும் இணைக்கப்பட்டுள்ள படிவங்களில் தலைமையாசிரியரால் விவரங்களை எவ்வித தவறுகள் இன்றி பூர்த்தி செய்யப்பட வேண்டும் எனவும், அவ்வாறு தவறுகள் ஏதும் ஏற்படின் அதற்கு சம்பந்தப்பட்ட பள்ளி தலைமையாசிரியர்களே முழு பொறுப்பேற்க நேரிடும் எனவும் தெரிவிக்கலாகிறது.

இணைப்பு – படிவம் 1மற்றும் 2.

முதன்மைக்கல்வி அலுவலர்,
தஞ்சாவூர்.

25/9/23

பெறுநர்:
தலைமையாசிரியர்கள்,
அனைத்து அரசு / நகராட்சி / மாநகராட்சி உயர் / மேல்நிலைப்பள்ளிகள்,
தஞ்சாவூர் மாவட்டம்.

நகல் – மாவட்டக் கல்வி அலுவலர்(இடைநிலை), தஞ்சாவூர் மற்றும் கும்பகோணம்
(அனைத்து அரசு உயர் / மேல்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு உடன் மின்னஞ்சலில் அனுப்பி வைத்திடக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்).